செய்தி வெளியீடு நாள் : 23.1.2024

**"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து" தென் மாவட்டங்களுக்கு SETC, TNSTC & MTC பேருந்துகள் முறையாக இயக்கப்படுவது குறித்தும் மற்றும் ஆம்னி பேருந்துகள் தென் மாவட்டங்களுக்கு இம்முனையத்திலிருந்து முழுமையாக இயக்குவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக**

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் தலைமையில் துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம்.**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" 30.12.2023 அன்று திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். இப்பேருந்து முனையத்தை முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (23.01.2024) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் தலைமையில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து" தென் மாவட்டங்களுக்கு போக்குவரத்துக் கழக பேருந்துகள் (SETC, TNSTC & MTC) முறையாக இயக்கப்படுவது குறித்தும் மற்றும் ஆம்னி பேருந்துகள் இம்முனையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு முழுமையாக இயக்குவது குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கிளாம்பாக்கம் **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து"** தென் மாவட்டங்களுக்கு தற்பொழுது SETC பேருந்துகள் மட்டுமே புறப்பாடு உள்ளது. மேலும் இம்முனையத்திலிருந்து அனைத்து TNSTC

பேருந்துகளும் புறப்பாடு செய்வது குறித்தும் மற்றும் தென் மாவட்டங்களுக்கு செல்லக் கூடிய ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து முழுமையாக புறப்பாடு செய்வது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனை செய்யப்பட்டது. மேலும் சென்னை கோயம்பேடு மற்றும் பிற முக்கிய இடத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லக் கூடிய ஆம்னி பேருந்துகளில் பயணிகளை ஏற்றிச் செல்வதை தடுக்க போலீசார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், போக்குவரத்துத்துறை ஆணையர் திரு.அ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் இ.ஆ.ப. அவர்கள், பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) திரு.ர. சுதாகர், இ.கா.ப., அவர்கள், காவல் துணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.பவன் குமார், இ.கா.ப., அவர்கள் (தாம்பரம் போக்குவரத்து) திரு.ந.குமார் அவர்கள், (சென்னை வடக்கு, போக்குவரத்து) திரு.பி.குமார் அவர்கள், SETC மேலாண் இயக்குநர் திரு.கே.இளங்கோவன் அவர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.